**செய்தி வெளியீடு** **நாள் : 01.06.2024**

**கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனைய வளாகத்தை பிளாஸ்டிக் பொருட்கள் தடை செய்யப்பட்ட வளாகமாக மாற்றும் நடவடிக்கையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (CMDA).**

**தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் பசுமைப் படையினர் (Green Brigade) மூலம் அனைத்து கடைகளிலும் ஆய்வு மேற்கொண்டு பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தாத வகையில் துண்டு பிரசுரங்களை விநியோகித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.**

************

கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் இன்று (01.06.2024) **தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள பசுமைப் படையினர் (Green Brigade)**, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலர்கள் மற்றும் BVG நிறுவன பணியாளர்களுடன் இணைந்து இப்பேருந்து முனையத்தில் செயல்பட்டு வரும் அனைத்து கடைகளிலும் ஆய்வு மேற்கொண்டு பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தாத வகையில் அவர்களுக்கு தேவையான அறிவுரைகளையும், அது தொடர்பான துண்டு பிரசுரங்களையும் விநியோகித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் கடந்த 30.12.2023 முதல் திறக்கப்பட்டு தற்போது முழு வீச்சில் இயங்கி வரும் நிலையில், பயணிகளின் நலன் கருதி ஏற்கனவே பெருமளவிலான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில் பயணிகளின் பாதுகாப்பு கருதியும் இனிமையான பயண அனுபவத்தினை வழங்கும் பொருட்டும் கூடுதல் பணிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த பேருந்து முனையத்தில் தற்சமயம் 18 உணவகங்கள், 19 சிற்றுண்டி கடைகள், 4 இதர வகை கடைகள் என மொத்தம் 41 கடைகள் திறக்கப்பட்டுள்ளன. பேருந்து முனைய வளாகத்தில் இருந்து நாளொன்றுக்கு 3 – 4 டன் குப்பைகள் தினசரி சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இப்பேருந்து முனையத்தின் தூய்மையான செயல்பாட்டினை மேம்படுத்தும் வகையிலும், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையிலும் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனைய வளாகம் முழுவதும் **"ஒரு முறை மட்டும் பயன்படுத்தும் நெகிழி (பிளாஸ்டிக்) தடை செய்யப்பட்ட வளாகமாக"** கடந்த 01.05.2024 முதல் அறிவிக்கப்பட்டது. அதனை

நடைமுறைப்படுத்தும் விதமாக, பேருந்து முனையத்தின் கடை உரிமையாளர்கள், பணியாளர்கள், போக்குவரத்து துறை ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அது குறித்து உரிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கடந்த ஒரு மாத காலமாக பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, பேருந்து முனையத்தில் தற்போது செயல்பட்டு வரும் கடையின் உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்களுடன் 06.05.2024 மற்றும் 20.05.2024 ஆகிய தினங்களில் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு பேருந்து முனையத்தில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் குறித்தும் அவற்றுக்கு மாற்றாக பயன்படுத்தப்பட வேண்டிய பொருட்கள் குறித்தும் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தினர் மற்றும் மாவட்ட உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் மூலமாக எடுத்துரைக்கப்பட்டு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களின் பட்டியல் மற்றும் அவற்றுக்கு மாற்றாக பயன்படுத்த வேண்டிய பொருட்களின் பட்டியல் குறித்த விவரங்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

உணவுப் பொருட்களை பார்சல் செய்வதற்கு பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்கள், பிளாஸ்டிக் டம்ளர்கள், சாப்பிடும் மேசையின் மேல் பரப்பப்படும் பிளாஸ்டிக் விரிப்பான்கள், பிளாஸ்டிக்கால் ஆன தட்டுகள், பிளாஸ்டிக் பேப்பர் தட்டுகள், கப்புகள், பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் உறிஞ்சிகள், பிளாஸ்டிக் கொடிகள், பிளாஸ்டிக் ஸ்பூன்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான பிளாஸ்டிக் பொருட்களை பேருந்து முனைய வளாகத்திற்குள் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கு மாற்றாக, துணிப்பைகள், சணல் பைகள், காகிதத்தால் செய்யப்பட்ட தட்டுகள், டம்ளர்கள், அலுமினிய பூச்சுடைய சுருள்கள், காகித சுருள்கள், வாழை இலை தட்டுகள், மூங்கில்/ பாக்கு மட்டை தட்டுகள், மரத்தினால் செய்யப்பட்ட தட்டுகள், ஸ்பூன்கள், டம்ளர்கள் உள்ளிட்ட மாற்றுப் பொருள்களை பயன்படுத்துவதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கான சிறப்பு நடவடிக்கையாக, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள பசுமைப் படையினர் (Green brigade) இன்று 01.06.2024 தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்துடன் இணைந்து இந்த பேருந்து முனையத்தில் செயல்பட்டு வரும்

அனைத்து கடைகளிலும் இன்று ஆய்வு மேற்கொண்டு பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தாத வகையில் அவர்களுக்கு தேவையான அறிவுரைகளையும், அது தொடர்பான துண்டு பிரசுரங்களையும் இன்று விநியோகித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

மேலும், இது தொடர்பாக, பொதுமக்கள், பணியாளர்கள் மற்றும் அனைத்து பிரிவினருக்கும் உரிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பேருந்து முனைய வளாகம் முழுவதும் ஆங்காங்கே விழிப்புணர்வு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. விழிப்புணர்வு நடவடிக்கைகள் நிறைவு பெற்ற பின்னர், தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவோர் தொடர்பாக அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு உரிய அபராதம் விதிக்கப்படும்.

எனவே, கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தின் செயல்பாட்டினை மேம்படுத்தும் வகையிலும், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையிலும் பேருந்து முனைய வளாகம் முழுவதும் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்கள் தடை செய்யப்பட்ட வளாகமாக அறிவிக்கப்பட்டு, அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தும் வகையிலான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தினை பிளாஸ்டிக் பொருட்கள் அற்ற வளாகமாக மாற்றுவதற்கு பயணிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் போதிய ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

********